**TNEB**
**எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

மலர்- 5 ✧ இதழ்-8 ✧ மார்ச் 2023

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**



தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.

✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org


# மணியடிப்போம்! மனுநீதிச் சோழனுக்கு!

ஆவலோடு எதிர்பார்த்த இடைத்தேர்தல் திருவிழா நடந்து முடிந்திருக்கிறது. நாட்டிற்கு நல்ல பல செய்திகளையும் தந்திருக்கிறது. அரசியல், தேர்தல், ஆட்சி அதிகாரத்திற்கான வரைமுறைகள் என்னவென்றெல்லாம் அங்கீகரிக்கப்பட்டிருக்கக் கூடிய அரசியல் கட்சிகளின் வழியாக அனைவரும் அறிந்து கொள்ளக் கூடிய வழக்கமான பாணியில் மீண்டும் புதுமையுடன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

கஞ்சித் தொட்டி வைத்த இடத்தில் பிரியாணி போட்டு எதிர்ப்பை காட்டிய முந்தைய அரசியல் தொடர்புடைய பின்னணியில் அரசியல் பார்வையாளர்கள் மத்தியில் அதிசயத்தை ஏற்படுத்தியிருக்கிறது இடைத் தேர்தல்.

படிக்கின்ற மாணவன் நல்ல பணிக்கு செல்ல வேண்டும், பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதுபோல அரசியலுக்கு வரக்கூடிய இளைஞர்களுக்கு அடிப்படை சித்தாந்தம் பெற அவ்வப்போது அரசியல் வகுப்பாக இலவசமாக காணக் கிடைக்கிறது மக்கள் சேவையின் மகத்துவத்தை அறிந்து கொள்ள வாய்ப்பினை அமைந்திருக்கிறது.

மின்சார வாரிய தொழிலாளர்கள் மத்தியில் இடையில் நின்றிருக்கக் கூடிய பேச்சுவார்த்தை ஊதிய உயர்வு இதர பிரச்சினைகள் தீர்ப்பதற்கு என்று தொடரும் என்ற ஆவல் ஒரு பக்கம்! ஊடகங்கள் தெரிவிக்கும் செய்திகள்!!! ஓரிரு வாரத்தில் முற்றும் பெறலாம் என தெரிவிக்கிறது.

மார்ச் 20 முதல் தொடங்குகின்ற சட்டசபைக் கூட்டத்தொடர் நாட்டு நலன் பேணும் என நாமும் அக்கறையாய் கண்காணிக்கிறோம். மின்சார வாரியத்தின் பாரம்பரியத்தை மீட்டெடுக்க வேண்டிய, பொதுத்துறையிலே நிலை நிறுத்த வேண்டிய மற்றும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுதல் என்ற பெரும் நம்பிக்கையை மெய்ப்பித்திட வேண்டிய கடமையும் அரசுக்கு உள்ளது என்பதையும் அறிவோம்.

ஆதார் எண் இணைப்பில் அவசரம் காட்டாமல் நிதானமாக செயல்பட்டிருந்தால் இத்தனை குளறுபடிகள் வந்திருக்காது என்பதையும் ஆதார் இணைப்பினால் உள்ள சாதக பாதகங்கள் தெரியாமல் மக்கள் அவதியுறுவதைப் பார்த்த பின்னும் முறையான அறிவிப்பில்லா சூழலும் ஆச்சரியம்தான்!

செய்தித்தாள்கள் எண்ணுவதையும் எழுதுகின்றன. காதில் கிடைக்கும் செய்திகளையும் எழுதுகின்றன அன்றாடம் செய்தித்தாள்களில் மின்வாரியம் குறிப்பிட்ட செய்தி வராமல் இல்லை என்கிற அளவிற்கு மின்வாரியத்தின் செயல்பாடும் தொழிலாளர்கள் குறித்த செய்தியும் பரபரப்பாக வந்த வண்ணம் உள்ளதை பார்க்கின்றபோது பிற துறைகள் இந்நாட்டில் இல்லையோ என தோன்றுகிறது!

விவசாய மின்இணைப்புகளின் பயனாளிகள் திருச்சிக்கு படையெடுத்தது போல நெசவு பாய் தொழிலின் பயனாளிகள் அணிவகுப்பதில் அரசியல் புகுத்தப்பட்டுள்ளதை அறியாமலா உள்ளோம். நட்டத்தில் இயங்கும் இந்நிறுவனத்தில் திருச்சிக்கு நிகழ்வுக்கு அதிகாரப் பூர்வமாக 20 கோடி செலவினம் என செய்திகள் காதுக்கு வந்தன. இப்போது எவ்வளவு செலவு? யார் அறிவார்! பிள்ளை பிடிக்கும் பூச்சாண்டி போல பொறியாளர்கள், தொழிலாளர்கள், பயனாளிகளை அழைத்து வர உத்தரவிடுவது பாராட்டுக்குரியதா என கேள்வி கேட்காமல் இருக்க முடியவில்லை.

வேலை நிறுத்தத்திற்கு தடை தந்த நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு வருவதில் திட்டமிட்டபடி காலதாமதமாகிறது போலும்!

போராட்டத்தை முடக்கவிட்டு பெருமையைத் தேடிட விட முடியாது! யாவும் மக்கள் மன்றத்தின் முன்னே நிற்கத்தான் செய்யும்.

பறிபோகும் உரிமைகளை பாதுகாக்க, பாடுபட்டு உழைப்பவனுக்கு பணப் பயன் கிடைத்திட, மக்கள் சேவைக்கான பொதுத்துறையாக நீடிக்க செய்திட, அச்சுறுத்தும் உத்தரவினை திரும்ப பெற ...... என கோரிக்கைகள் ஏராளமாய் உள்ளது.

24 மணி நேரமும் பணி செய்யும் நிறுவனத்தின் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் மனு அளிக்க கோட்டை நோக்கி பேரணி! மார்ச் 28 என்பது வெற்றிவாகை சூடி வரலாற்றில் புது அத்தியாயம் எழுதட்டும்!

*''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்''.*

பொய்யாமொழிப் புலவனின் வாக்கு மெய்யாகுமா? பொய்யாகுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!

***- ஆசிரியர்***

## ‘உழைப்பே உயர்வு தரும்’

**- ஆ. கண்ணாதுரை,** மாநில துணைத் தலைவர் TNEBEF

**த**மிழ்நாடு மின்சார வாரிய எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில பொருளாளர் திரு. J. லூர்துபாஸ்டின்ராஜ் அவர்கள் மின்சார வாரியத்தில் 35 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி 28.02.2023 அன்று இளநிலை பொறியாளராக பணி ஓய்வு பெற்றார். பணி நிறைவை போற்றி அன்று மாலை நடைபெற்ற கூட்டத்திற்கு குனியமுத்தூர் கோட்ட செயற்பொறியாளர் Er. S. சுரேஷ், B.E.,அவர்கள் தலைமை தாங்கினார். எம்ப்ளாயீஸ் பெடரேசன் பொதுச்செயலாளர் மதிப்புக்குரிய அ. சேக்கிழார் அவர்கள் குறிச்சி துணை மின்நிலையம் வருகை தந்து வாழ்த்திப் பேசி சிறப்பித்தார். நெகமம் கோட்ட செயற்பொறியாளர் திருமதி. Er. லட்சுமி, BE உள்ளிட்ட பொறியாளர்கள், அலுவலர்கள், உறவினர்கள், நண்பர்கள், கோவை மண்டல நிர்வாகிகள் கலந்நது கொண்டு வாழ்த்தினர்.

தமிழ்நாடு மின்சார வாரிய எம்ப்ளாயீஸ் பெடரேசன் சார்பில் திரு. J. லூர்துபாஸ்டின்ராஜ் அவர்களின் வாரியப் பணி நிறைவு மற்றும் தொழிற்சங்க பணியை பாராட்டும் விழா மாநிலத் தலைவர் மதிப்புக்குரிய திரு. S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் 05.03.2023 ஞாயிறு காலை 10.00 மணியளவில் கோவை-24, செங்கப்ப கோணார் திருமண மண்டபத்தில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. செயல்தலைவர் திரு. R. ஜெயராமன், அமைப்பு செயலாளர் திரு. K. நாராயணமூர்த்தி, மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. M. பாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கிய சீர்மிகு விழாவுக்கு வருகை புரிந்த அனைவரையும் மாநில செயலாளர் திரு. S. சதீஸ்சங்கர் வரவேற்று பேசினார், முன்னதாக திருமதி. B. இந்து, செல்வி. சுஸ்மிதா, இளஞ்சிறுமியர் ஹர்ஸதா, மக்ரீனா ஆகிய நால்வரின் நேர்த்தியான நாட்டியம் அனைவரையும் மகிழ்வித்தது.

பட்டுத்துணிக்கு தங்கசரிகை இழைத்து அழகு சேர்ப்பதுபோல எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிர் அணியினர் விழா மிளிரும் வண்ணம் விருந்தினரை மலர்தூவி வரவேற்றனர்.

முக்கிய அழைப்பாளர்களை, தொண்டர் படைவீரர்கள் மிடுக்குடன் வணக்கம் செலுத்தி நுழைவாயிலில் இருந்து மேடை வரை அழைத்து வந்தனர். தொழில்நுட்பப் பிரிவு மாநில இணைச்செயலாளர் திரு. P. நாகராஜ், ME., மற்றும் திருமதி. B. இந்து இருவரும் விழாவை தொகுத்து வழங்கினர். எப்படிப்பட்ட பிரச்சனைகளை சந்திக்க நேர்ந்தாலும், எந்நேரமும் நேர்மையான மனிதனாகவே வாழ வேண்டும், மனந்தளர்ந்து துணிவுடன் நிமிர்ந்து எதிர்கொள்ள வேண்டும் என்பதை வாழ்வியல் தத்துவமாக ஏற்று திகழ்பவர் என்பதை அவரின் பணி நிறைவு பாராட்டு விழா நிரூபித்தது.

அவரின் தந்தை அமரர் திரு. ஜேம்ஸ்பால் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றியவர். போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்று வந்த தீவிரமான தொழிற்சங்க தலைவர். அந்த மரபணு அவருக்கு இயற்கை தந்த வரம். தாயார் திருமதி கேப்ரியல் (எ) பாப்பி அவர்களும் ஆசிரியராகப் பணியாற்றியவர். இஸ்லாமியம், யூதம், கிருஸ்துவம் ஆகிய மத நூல்களில் கூறப்பட்டுள்ள ‘கேப்ரியல்’ என்ற நல்ல இறைதூதர் கடவுளின் செய்தியை மனிதர்களுக்கு கொண்டு செல்லும் முக்கிய பங்கு வகிக்கிறார் என்பது அவர்களின் நம்பிக்கை. இந்த தாய் உதாரணமான ஒரு நல்ல மகவை ஈன்றெடுத்து அளித்துள்ளார்.

மாநில தலைவர் திரு. S. மணிகண்டன் அவர்கள் தன் தலைமை உரையில் ஒரு இளநிலை பொறியாளராக ஓய்வு பெற்றுள்ள தோழர் J.L. பாஸ்டின்ராஜ் அவர்கள் உண்மையில் ஒரு முதிர்ந்த

நெறியாளராக நமக்கு முன்னுதாரணம் படைக்கிறார். தொழில்நுட்ப பயிற்சி மையத்தில் பயிற்றுனராக 10 ஆண்டுகள், கோவை மின்திட்ட பணியாளர் கூட்டுறவு கடன் சங்கத்தின் தலைவராக 10 ஆண்டுகள், தொழிற்சங்க பயிற்சி வகுப்புகளின் ஆசிரியர் என்று மூன்று தளங்களில் ஆற்றலுடன் விளங்கிய தோழர் J.L. பாஸ்டின்ராஜ் அவர்கள் உண்மையான ஒரு மும்முனை மின்சாரம்.

'வாழ்வின் நெருக்கடியான தருணங்களில் தன்னலமா, பொதுநலமா? என்று குழப்பம் வந்தால் தோழர் J.L. பாஸ்டின்ராஜ் அவர்களிடம் எந்த ஏற்றத்தாழ்வும் (Fluctuation) கிடையாது. அவரது இதயத்தில் நிலை நிற்கும் மார்க்ஸியம் என்ற மின்மாற்றி (Transformer) சிந்தனை, சொல், செயலை எப்போதும் சீராகவே வைத்துள்ளது. 'தளகர்த்தராக விளங்கும் இவர் தொழிலாளர்களிடம் நம் சித்தாந்தங்களை பேசி அவர்களை சிறந்த தொழிற்சங்க பொறுப்பாளர்களாக உருவாக்கிக் கொண்டுள்ளார்.'

'Behind Every Great Husband
Is an encouraging wife' - சிறந்த மனிதனுக்குப் பின்னால் உற்சாகமூட்டும் மனைவி இருக்கிறார் என்பார்கள். தோழர் J.L. பாஸ்டின்ராஜ் அவர்களின் மனப்போக்கிற்கு அவரது துணைவியார் நமது அன்புச் சகோதரி திருமதி. கேத்தரின் அவர்கள் தரும் ஊக்கமும், புதல்வர் திரு. ஜேம்ஸ்ராய் அவர்கள் ஒத்துழைப்பும் முக்கிய காரணிகள் என்று வாழ்த்துக் கூறி அவர்களுக்கும் எம்ப்ளாயீஸ் பெடரேசன் சார்பில் இதயபூர்வமான பாராட்டும் நன்றியையும் தெரிவித்தார்.

'திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்கள் வள்ளுவரின் மூன்று குறள்களுக்கு எடுத்துக்காட்டாக உள்ளார்' என்று மதிப்புக்குரிய பொதுச்செயலாளர் திரு. அ. சேக்கிழார் அவர்கள் தன் சிறப்புரையில் கூறினார்.

'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச்செயல்' - என்ற குறளுக்குரிய பெற்றோர் இவரை உருவாக்கியுள்ளனர்.

'மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கெல்லலெனும் சொல்' - தள்ளாத வயதில் விழாவுக்கு நேரில் வந்து தன் மகனின் பெருமை கண்ட தாயார் உச்சிமுகர்ந்து ஆசி வழங்கிய நிகழ்வு வள்ளுவன் வாக்கை மெய்ப்பித்தது.'

'வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனைய உயர்வு ' - கிடைத்துள்ள உயர்வுகள் இவரின் தூய்மையான உள்ளத்திற்காக பெற்றவை' - என்றார்.

'மின்தொழிலில் ஈடுபட்ட
மேன்மை மிகு அண்ணன்
ஓய்வுக்கு ஓய்வுகொடு
ஓயாது உழைத்திடு
உரிமைகளை வென்றெடுக்க
உருவான சங்கம் - நீயதில்
உருக்குலையா தங்கம் - வாழ்வில்
ஒப்பில்லா பணியாற்றி
ஊர்போற்றும் சிங்கம்'

என்று பொதுச்செயலாளர் அவர்கள் கவிதை வாசித்து வாழ்த்தியது பொருத்தமாக அமைந்தது.

வாழ்த்துக்கள் கூற வந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட அன்பு நெஞ்சங்களால் அரங்கம் நிறைந்து வழிந்தது.

கோவை மண்டல தலைமைப் பொறியாளர் திரு. R.K. வினோதன் B.E., M.I.E., அவர்கள் வருகை தந்து வாழ்த்தியது விழாவுக்கு சிகரம் வைத்தாற்போல் அமைந்தது. குறைந்த காலம் அறிந்தாலும் திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்களின் சிறப்பைக் கூறினார். மின்வாரியத்தை பொதுத்துறையாக காத்து மக்கள் சேவை தொடர அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும் என்றார்.

முன்னாள் தலைமைப் பொறியாளர்கள் திரு. N. மணி, M.E., MBA., F.I.E., திரு. K. குருராஜன், B.E., M.I.E., கோவை பொதுக்கட்டுமான வட்ட மேற்பார்வை பொறியாளர் திரு. S. சிவபிரகாஷ், M.E., MBA., மற்றும் பல பொறியாளர்கள் வந்து வாழ்த்தி விழாவை சிறப்பித்தனர். திரு. K. குருராஜன் அவர்கள் தன் வாழ்த்துரையில் திரு. J.L.பாஸ்டின்ராஜ் அரசியல் மற்றும் தொழிற்சங்கத்தை தாண்டி அனைத்து மட்டத்திலும் நட்பு வட்டாரத்தை கொண்டுள்ளார். இது பெருமைபடத்தக்கது என்று பாராட்டி பேசினார்.

AESU மாநிலத் தலைவர் திரு. R. நாகராஜன் ‘தன்’ நீண்ட நாள் நட்புக்கு இலக்கணமாக இருப்பவர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவரின் முழு நேர தொழிற்சங்க பணிகள் தொடரட்டும்; தொழிற்சங்கங்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்’ என்றார்.

திரு. மு. சுப்ரமணியன், பொதுச்செயலாளர் TNEBTPAS அவர்கள் ‘பெருவாரியாக திரண்டுள்ள இக்கூட்டம் திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்களின் சிறப்பான உழைப்பிற்கு சான்று’ என்று வாழ்த்தினார்.

தோழர் ஜெயசங்கர், மாநில தலைவர் COTEE அவர்கள் திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்களின் பண்பான நட்பை பாராட்டி, மின்வாரிய தொழிற்சங்க தளத்தில் உயிர்ப்போடு இயங்கும் நான்கு சங்கங்களில் ஒன்றாக உள்ள எம்ப்ளாயீஸ் பெடரேசன் மின்வாரியத்தில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக உருவாகியுள்ளது காரணம் உங்கள் கடின உழைப்பு என்று பாராட்டி பேசினார்.

திரு. P.K. தமிழ்வாணன் அவர்கள் மண்டல செயலாளர் மின்சார வாரிய அண்ணா தொழிற்சங்க பேரவை, இதுபோன்ற ஒரு பிரம்மாண்டமான விழாவுக்கு தகுதியானவர். திரு. J.L. பாஸ்டின்ராஜ், எம்ப்ளாயீஸ் பெடரேசன் செயல்கள் சிறப்புடன் உள்ளது என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

கவிஞர் கா.சு. குணசேகரன் (TNEB ATO) அவர்கள் திரு. J.L. பாஸ்டின்ராஜ் ‘கோவை மின்வாரிய கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்தின் தன்னிகரில்லாத தலைவராக செயல்பட்டார். அனைவரின் தேவை அறிந்து நேர்மையுடன் விரைந்து உதவினார். யாரையும் இவரோடு ஒப்பிட முடியாது’ என்று பாராட்டினார். மற்றும் திரு. மதுசூதனன், தலைவர் COTEE கோவை மாநகர், திரு. ஆறுக்குட்டி, மாநில இணைச் செயலாளர், AESU, திரு. கிருஷ்ணன், தொ.மு.ச அலுவலக பொறுப்பாளர், கோவை தலைமை பொறியாளர் அலுவலகம், திரு. தெய்வசிகாமணி, எஞ்சினியர்ஸ் யூனியன், கோவை, திரு. M. கமலநாதன், செயல் தலைவர், வரைவாளர் சங்கம், திரு. சுகுமார், பொதுச்செயலாளர், மதிப்பீட்டு பணியாளர் சங்கம், திரு. P. சுடலை, பொதுச்செயலாளர் TNEBREOS திரு. சிவராமகிருஷ்ணன் Financial Adviser ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

எம்ப்ளாயீஸ் பெடரேசன் மாநில பொறுப்பாளர்கள், மாநில செயற்குழு உறுப்பினர்கள், கிளை நிரிவாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். காலத்தின் அருமை கருதி மண்டல வாரியாக மூத்த நிர்வாகிகள் பேச அழைக்கப்பட்டு வாழ்த்துரை வழங்கினர். மகளிர் அணி சார்பாக மாநில இணைசெயலாளர் திருமதி. V. சிவராணி சேலம், ஈரோடு மண்டலம், திருமதி. E. மோகனப்ரியா, திருப்பூர், திருமதி. சரத்குமாரி ஆகியோர் திருவண்ணாமலை பேசினார்.

சீரும் சிறப்புமாக நடந்த இவ்விழா திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்களின் பணிப் பாராட்டு விழாவாக மட்டுமின்றி எம்ப்ளாயீஸ் பெடரேசனின் சிறப்பையும், கட்டுக்கோப்புடன் கூடிய உறுதியையும் காட்டியது என்றால் மிகையாகாது.

பின்னர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்கள் ஏற்புரையில் தன் தந்தை தொழிற்சங்க போராட்டத்தில் இருமுறை சிறை சென்று வந்தது, பள்ளிப் படிப்பு, குறிச்சியில் கள உதவியாளராக பணியேற்று இறுதியாக பதவி உயர்வில் இளநிலை பொறியாளராக பணியேற்று ஓய்வு பெற்றதை கூறினார். அதில் நாம் புரிந்து கொண்டது.

திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்கள் அகராதியில் ‘இல்லை’, ‘தெரியாது’ என்ற இரு வார்த்தைகளும் இல்லை. இல்லாததை தெரியாததை தெரிந்து கூறுவார். நாமும் அதை பின்பற்றுவோம்.

மாநில இணைச்செயலாளரும் கோவை தெற்கு கிளையின் தலைவருமான திரு. A. காதர் இப்ராகீம் நன்றியுரைக்குப் பின் நாட்டுப்பண் இசைத்து விழா பகல் 3.00 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

**வாழ்க எம்ப்ளாயீஸ் பெடரேசன்! வளர்க தொழிலாளர் ஒற்றுமை!! வெல்க நம் பணிகள்!!!**

## தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு - சென்னை

**அன்பார்ந்த மின்வாரிய ஊழியர்களே! பொறியாளர்களே! அலுவலர்களே!**

மின்வாரிய பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகளை தீர்த்து வைக்க வாரிய நிர்வாகம் இதுவரை முன் வரவில்லை. எனவே மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்ல எதிர்வரும் 28.3.2023 அன்று மின்வாரிய தலைமையகத்தில் இருந்து கோட்டையை நோக்கிப் பேரணியாக சென்று மனு அளிப்பது என்ற முறையில் தமிழக முழுவதும் உள்ள மின்வாரிய பணியாளர்கள் ஒன்று திரண்டு கோட்டையை நோக்கி அணி வகுப்போம்! கோரிக்கைகளை வென்றெடுப்போம்!

கோட்டை நோக்கி பேரணியின் அவசியத்தை விளக்க, அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு எதிர்வரும் 17.3.2023 அன்று மாலை நேர விளக்க கூட்டங்களை நடத்த வேண்டுகிறோம்.

### கோரிக்கைகள்

1) **22.2.2018இல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பதவிகளை அனுமதித்திடுக! 56000, காலிப்பணியிடங்களை நிரப்பிடுக!**
2) **நிரந்தர தன்மை வாய்ந்த பதவிகளை அவுட்சோர்சிங் முறைக்குவிடாதே! Redeployment முறைக்கு செல்லாதே! இளைஞர்களின் வேலைவாய்ப்பு கனவை பறித்துவிடாதே!**
3) **GO 100 அடிப்படையில் பணியாளர்கள் ஏற்றுக் கொள்ளுகின்ற வகையில் அரசு உத்தரவாதத்துடன் கூடிய, முத்தரப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திடுக!**
4) **B.P.No 2 நாள் 12.4.2022யை ரத்து செய்திடுக !**
5) **01.12.2019 முதல் மின்வாரிய பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பணப் பயன்களை வழங்கிடுக!**
6) **மின்வாரிய பணியாளர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமலாக்கு!**

தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு, சென்னை

# சர்வதேச உழைக்கும் மகளிர் தினம் - மார்ச்-8
# சவாலை தேர்வு செய்யுங்கள், தோழியரே!
# "Digital Innovation and Technology for gender eqality"

**2023ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்திற்கான கருப்பொருள்:**

''டிஜிட்டல் யுகத்தின் புதுமை மற்றும் தொழில்நுட்பத்தில் பாலின சமத்துவம் வேண்டும்'' என்பதே! சர்வதேச மகளிர் தினத்தை அதிகாரபூர்வமாக 1977-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்தது எனினும், 1910-இல் டென்மார்க் நாட்டின் தலைநகர் கோபன்ஹேகனில் நடைபெற்ற சர்வதேவ சோஷிலிஸ்ட் பெண்கள் மாநாட்டில், மகளிர்தினம் கொண்டாடுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனால், தேதி இறுதி செய்யப்படவில்லை.

ரஷியாவில் தோழர் லெனின் தலைமையில், கொடுங்கோன்மை ஜார் மன்னரின் ஆட்சிக்கு எளிதாக 1917 நவம்பர் 7-அன்று புரட்சி நடந்தது. அதற்கு முன்னோடியாக, அந்த ஆண்டு மார்ச் 8-அன்று பெண் தொழிலாளர்கள், உணவு அமைதி (Brand & Peace) ஆகியவற்றிக்காகப் போராடினார். அதை நினைவு கூறும் வகையில் இனிமேல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 அன்று மகளிர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று 1921-ல் மாஸ்கோ நகரில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் பெண்கள் அகிலம் அமைப்பின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

உழைக்கும் பெண்களின் உரிமைகளை உறுதி செய்வதும், அனைத்துப் பணிகளிலும், அனைத்து நிலைகளிலும் பாலின சமத்துவத்தை உறுதி செய்வதும்தான் சர்வதேச மகளிர் நாள் கொண்டாட்டங்களுக்கான அடிப்படை நோக்கம்.

ஒவ்வொரு உரிமையையும், பெண்கள் போராடித்தான் வென்றிருக்கிறார்கள். திருமணமான பெண்கள் குடும்ப விவகாரங்களில் முடிவெடுப்பது, சொந்தமாகவோ, கூட்டமாகவோ பெண்களின் பெயரில் நிலமோ, வீடோ பதிவு செய்யப்பட்டிருப்பது, தனி கைபேசி வைத்திருப்பது, வங்கிக் கணக்கு வைத்திருப்பது போன்றவற்றில் பெண்கள் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு முன்னேறியிருப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

பெண்களின் கால்களைப் பிணைக்கும் சங்கிலிகளைக் கணக்கில் வைத்துப் பார்த்தால்தான் எவ்வவு தடைகளை மீறி அவர்கள் முன்னேற வேண்டியிருக்கிறது என்பது புரியும். மகளிர் தினம் கொண்டாடப்படும் நோக்கமும் ஒரு வகையில் பெண்களின் உழைப்பை அங்கீகரித்து அவர்களுக்கு அதிகாரமளிப்பதாக இருப்பது உண்மையே! பொதுவாக, ஆண்களைவிடப் பலவற்றில் பெண்கள் திறமைசாலிகளாகவும், நுண்ணுணர்வோடும் செயல்படுபவர்களாகவும் இருக்கிறார்கள்

தங்களுக்கான பாதையைத் தாங்களே அமைக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். வாய்ப்புகள் கிடைக்கிற இடத்தில் எல்லாம் ஆணைவிட பெண்கள் சிறப்பாகவே முத்திரை பதிக்கிறார்கள்.

பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்று ஐ.நா.சபை உலகளாவிய இலக்கை நிர்ணயித்து வலியுறுத்தும் இந்த 21ஆம் நூற்றாண்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கால்நடை வளர்ப்பு சார்ந்த பொருளியலில் நமது தமிழ்ச் சங்ககாலப் பெண்களின் பங்கிளப்பு சிறப்பானது. மோர், தயிர் விற்கும் ஆயர் மகளிரர் பற்றி அறிகிறோம்.

நெய் விற்ற பணத்தில் தங்க நகை வாங்காமல், தனது குடும்ப வருமானத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் எருமை, பசு வாங்கிய பெண்ணை ''பெரும்பாணாற்றுப்படை''யில் காண நேரிடுகிறது.

வீட்டுப் பொருளாதாரத்தை தோளோடு தோள் கொடுத்துத் தூக்கி நிறுத்தும் உழைக்கும் பெண்களின் இந்த இயல்பு இன்றும் தொடர்கிறது.

''இந்த உலகில் நிபந்தனையற்ற அன்பையும் பாசத்தையும் பரப்புபவர்கள் பெண்களே!''

பெண்கள் இல்லாத உலகில் அன்பு இருக்க முடியாது. அன்பு இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது! அருள் அன்னையாக, அன்புச் சகோதரியாக, அருமை மகளாக இந்த மண்ணில், மானுடத்தின்பால் நேசத்தின் மணம் பரப்பும் பெண்ணினத்திற்கு இன்னமும் பாலின பாகுபாடு காட்டப்படுவது, எந்தவிதத்தில் நியாயம்?

இந்தியாவில் அண்மையில் எடுத்த கணக்கெடுப்பில் ஆண்களைவிட அதிக நேரம் பெண்களே உழைக்கிறார்கள் என தெரிய வந்துள்ளது. சராசரியாக ஆண்கள் 7 மணி நேரம் உழைத்தாலும், பெண்கள் 9 முதல் 11 மணி நேரம் உழைக்கிறார்கள். அதுமட்டுமின்றி பாலினபேதம் ஊதிய ரீதியாகவும் தொடர்கிறது. ஆண்களைக் காட்டிலும் 34% குறைந்த பெண்கள் பெறுகிறார்கள். சமவேலைக்கு சமஊதியம் வழங்காத 93 நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

இந்திய ஏவுகணைத் திட்டத்திற்கு தலைமை வகித்த முதல் பெண் டெஸ்ஸி தாமஸ், 'மிக்-21 பைசன்'-ரகப் போர் விமானத்தை தனியாக ஓட்டிச்சென்ற பெண் விமானி சதுர்வேதி, உலகின் தலைசிறந்த பொருளாதார நிபுணரான இந்தியப் பெண் கீதா கோபிநாத், எவரெஸ்டடில் கால் வைத்த முதல் மாற்றுத்திறனாளிப் பெண் அருணிமா சின்ஹா போன்ற தனி மனுஷிகளின் வாகை சூடிய வாழ்க்கைக் கதைகள் நம்மை நெகிழ வைத்தபோதும் ஒட்டுமொத்த இந்தியப் பெண்களின் வளர்ச்சிக்கான தடைக்கற்கள் இன்னமும் அகற்றப்படாதது வருந்தத்தக்கதுதானே!

பணியிடம், ஊதியம், திருமணம் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் செல்லுதல், தொழில் முனைவு, சொத்து, ஓய்வூதியம், குழந்தைப்பேறு ஆகிய எட்டு அம்சங்களில் பெண்களுக்கான உரிமைகள் கிடைப்பதில், இந்தியப் பெண்கள் உலக சராசரியைவிட மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள்.

கல்வி பெறுவதும், பொருளாதாரப் பங்களிப்பும்தான் பெண்ணுரிமையின் ஆரம்பப் படிக்கட்டுகள். எந்தெந்த சமூகங்களில் கற்பதற்கும், உழைப்பதற்கும் ஊக்கப்படுத்துகிறார்களோ அந்தச் சமூகங்களின் பொருளாதாரம்தான் விரைவாக வளரும், சமூக நீதியும் அங்கேதான் வேரூன்றி தழைக்கும்.

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் துவக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை மகளிருக்கு உரிய முக்கியத்துவமும், ஆர்வமுடன் செயல்படும் மகளிர்களுக்கு தொழிற்சங்க பொறுப்புக்களை வழங்கி, பெண்மையை போற்றும் இயக்கமாக வளர்ந்து வருகிறது.

நம் நாட்டில் பெண்களுக்குச் சாதகமாக பல்வேறு சட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும், பெண்களின் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பெரும்தடையாக இருப்பது பாலினப் பாகுபாடுதான்.

அண்ணல் காந்தியடிகளும், தந்தை பெரியாரும் பெண்மையைப் போற்றியவர்களில் தலைசிறந்து விளங்குகிறார்கள். மகாகவி பாரதியார் பெண்மையை போற்றுவதை தன் மனைவியிடமிருந்தே தொடங்கினார்.

‘‘செல்லம்மா, எனக்கு சமமாக பக்கத்தில் அமர்ந்து கொள். உடலமைப்பில் மாறுபட்டாலும் ஆணையும் பெண்ணையும் சமமாகவே இறைசக்தி படைத்துள்ளது. எண்ணங்களும், உணர்வு களும் ஒன்றே ஆகும்’’ எனக் கூறிப் பெருமைப்படுத்தினார்.

இன்றைக்கு பெண்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற ஓரளவு உரிமைகளுக்காக, நெடும் போராட்டங்களை கடந்துதான் வந்திருக்கிறார்கள். பெண்களுக்கு ஆதரவான ஒவ்வொரு முடிவுக்கும், மாற்றத்துக்கும் போராட்டங்களே முதற்காரணம். இன்றைக்கும் அப்படியான போராட்டங்களுக்கான தேவை குறைந்துவிடவில்லை. கண்டிப்பாக அவை பெண்களுக்கான சவால்கள்தான். ஆனால், அதுதானே வெற்றிக் கதவுக்கான மந்திரச் சாவி!

தோழமையுடன்,
**சு. மணிகண்டன்,**
மாநிலத்தலைவர், TNEBEF

---

## ஓய்வுக்கு ஓய்வு கொடு! ஓயாது உழைத்திடு!!

**- சேக்கிழார் அப்பாசாமி**

மின்தொழிலில் ஈடுபட்ட
மேன்மைமிகு அண்ணன்- நம்மை
மீட்டுகின்ற கண்ணன் -அன்பில்
மிகுந்துநிற்கும் மன்னன் - நட்பை
மெருகேற்றி மிளிர்ந்திட்ட
மேதினியின் வண்ணன்

உழைக்கின்ற தொழிலாளியின்
உறுதுணையாம் நீ - நாளும்
உதவுகின்ற நீ - உலகில்
உயர்ந்தவனாம் நீ - என்றும்
ஓய்வின்றி சுற்றிவந்த
உத்தமனாம் நீ

உரிமைகளை வென்றெடுக்க
உருவான சங்கம் - நீயதில்
உயர்வான அங்கம் - செயலில்
உருக்குலையா தங்கம் - வாழ்வில்
ஒப்பில்லா பணியாற்றி
ஊர்போற்றும் சிங்கம்

சோதனைகள் தாங்கிநின்று
சோர்வின்றி சுற்றி - நாளும்
தோழர்களைப் பற்றி - வந்த
தோல்விகளை மாற்றி - என்றும்
தொய்வின்றி செய்திட்டாய்
தொடருதே வெற்றி

அகவையொன்று கூடுதலால்
அரசளிக்கும் ஓய்வு - ஆம்
அறுபதிலே ஓய்வு - உன்னை
அணுகாதே ஓய்வு - நாங்கள்
ஐயமின்றி வாழ்ந்திடவே
அனுமதியோம் ஓய்வு

ஆய்வுக்கு உட்படுமா
அண்ணலுன்றன் பணி - நீ
அனைவருக்கும் கனி - உன்
ஆற்றலென்றும் தனி - தோழா
ஆதரவாய் நின்றிடுவாய்
அன்பொழுக இனி

தோழர்கள் உன்றனுக்கு
சொல்லுகின்றோம் வாழ்த்து - நீ
தூற்றியோரை வாழ்த்து - உலகில்
துரோகிகளை வாழ்த்து - வாழ்வில்
தூயவுள்ளம் கொண்டோனே
சுடரொளியாய் வாழ்த்து

**சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 8**

# வரலாற்றில் மற(றை)க்கப்பட்ட சாதனைப் பெண்கள்




**உடுமலை ஆர். சக்திவேலு,** உபதலைவர், ✆ : 9942741388

இந்நாளில் இந்திய சுதந்திரத்திற்காக பல்வேறு போராட்டங்களை தியாகங்களை அவர்கள் அனுபவித்த சிறை கொடுமைகளை வரலாற்றில் இடம் பெறாமல் மறந்து போன அல்லது மறைக்கப்பட்ட தமிழக வீராங்கனைகளை நினைவு கூற விரும்புகிறேன். இந்திய சுதந்திரத்துக்காக மகாத்மா காந்தியால் அறிவிக்கப்பட்டபடி 1926 முதல் சுதந்திரம் கிடைக்கும் வரை ஆண்களுக்கு நிகராக பெண்களும் முன்னணியில் வந்து போராடி ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அதிகாரிகளால் சிறை தண்டனை அனுபவித்த சாதனைப் பெண்கள் ஏராளம்.

எந்த சிறைக்குப் போகிறார்கள் எவ்வளவு காலம் தண்டனை என்பது கூட அவர்களது குடும்பத்தாருக்கு தெரிவிக்காத கொடுமைகள் கர்ப்பிணியாக சிறை சென்றவர்களும் உண்டு. சிறையில் இருந்து வரு்மபோது நோய்வாய்ப்பட்டு சிதைந்து போனவர்களும் உண்டு. அவர்களில் தாழ்த்தப்பட்டவர் நாயுடு, ஐயர், சாஸ்திரி, பிள்ளை, முதலியார், கவுண்டர், தேவர் என்ற ஜாதி மத என மொழி வேறுபாடு இன்றி சிறை கொடுமைகளை சென்னை, மதுரை, கடலூர், வேலூர், கண்ணனூர், அலிபுரம், கேரளா போன்ற சிறைகளில் அனுபவித்தனர். வெள்ளையனே வெளியேறு இயக்கம் சட்ட மறுப்பு போராட்டம் அந்நிய துணிகளை பதிஸ்கரிப்பு தனிநபர் சத்தியாகிரகம் உப்பு சத்தியாகிரகம் ஆகஸ்ட் புரட்சி போராட்டம் தண்டி யாத்திரை இவை மட்டுமல்லாமல் நாடக மேடைகளிலும் திரைப்படங்களிலும் பொதுக்கூட்டம் மேடைகளிலும் தேசபக்தி பாடல்களைப் பாடியதற்காகவும் இந்திய தேசிய இயக்கத்தில் சேர்ந்தமைக்காகவும் கூட பெண்களை கைஞுது செய்து சிறையில் அடைத்தனர் எண்ணற்ற சாதனைகள் செய்து இன்றைக்கு அவர்களது தியாகத்தால் சுதந்திரத்தை அனுபவித்து வரும் நாம் அவர்களது ஒரு சிலர் பெயரை மட்டும் நினைவில் நிறுத்தி இந்த மகளிர் தினத்தில் அவர்களுக்க அஞ்சலி செலுத்துவோம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மதுரை காளியம்மாள், பெரியகுளம் ஜி. ரங்கம்மாள், திருத்தங்கள் நாராயண அம்மா, கொடுமுடி அலமேலு மங்கை, நெல்லை சீதை அம்மாள், தென்காசி பார்வதி அம்மாள், தூத்துக்குடி ஜெயமணி அம்மா மற்றும் அவர்கள் சகோதரி ஜானகி அம்மாள், தூத்துக்குடி ஐயர் இனத்தைச் சேர்ந்த சாரதாம்பாள், தூத்துக்குடி தாயம்மாள் நெல்லை எங்கம்மாள் ராஜபாளையம் மஞ்சம்மாள், விருதுநகர் ராஜாமணி அம்மாள், அவிநாசி சோனாபாய், சத்தியமங்கலம் முத்துலட்சுமி, திருப்பூர் லட்சுமி அம்மாள், உடுமலை ஜானகி அம்மாள், கோவை அல்லம்மாள், சாவித்திரி அம்மாள், மதுரை பத்மாசினி அம்மா, முத்தம்மாள், பங்கஜத்தம்மாள், மதுரை மீனா கிருஷ்ணசாமி விசாலாட்சி சீலிக், காரம்மாள், தாயம்மாள், சீதாலட்சுமி, முத்துபாக்கியலட்சுமி, சொர்ணத்தம்மாள், அகிலாண்டம் அம்மையார், என்.எம்.ஆர்.எஸ். பருவதவர்த்தினி விஜயலட்சுமி லட்சுமி அம்மா, திருச்சி சுந்தர லட்சுமி கல்யாணியம்மாள், நீலாவதி அம்மாள், எம்.ஆர். கமலவேணி

கமலா ராமசாமி, கரூர் பாக்கியலட்சுமி, கரூர் ஜெகதாம்பாள், குப்பம்மாள், திண்டுக்கல் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த 5 மாத கர்ப்பிணியாக இருந்த பியாரிபீபி பாதுகாப்பு சட்டப்படி கடுங்காவல் தண்டனை சென்னை அம்மு சுவாமிநாதன் எம்.எஸ். பாலம்மாள் தேவகி அம்மாள், ராஜேஸ்வரி பாய், குடியாத்தம் புஷ்பவதி அம்மா, திருவண்ணாமலை லட்சுமி, காந்தம்மா கிருஷ்ணகிரி அம்மையம்மாள், தஞ்சை சாரதாம்பாள், நாகை ஆயிஷா, திருத்துறைப்பூண்டி செங்கமலை, சேலம் லட்சுமி அம்மாள், விழுப்புரம் அங்கட்சி அம்மாள், கிருஷ்ணவேணி கடையும் சகோதரிகள் மாடத்தி வள்ளியம்மாள் தெய்வானை அம்மா, பரமக்குடி ஜெயலட்சுமி அம்மாள், (கேரளா அலிபுரம் சிறையில் தனிமை சிறை) இருந்தவர் அருப்புக்கோட்டை செல்லம்மாள் ராமநாதபுரம் ராஜலக்ஷ்மி நீலாமேருண்ணி, திருவாடானை மாணிக்கம் அம்மாள், திண்டுக்கல் திருமலை அம்மையார், கல்லிடைக்குறிச்சி லட்சுமி அம்மா, சங்கரன்கோவில் ராக்கோணம்மாள், வெள்ளாள குளம் ரங்கம்மாள், நெல்லை ராஜம்மாள், விஜயநாராயணம் சண்முகத்தம்மாள், ஸ்ரீவைகுண்டம் சந்தான லட்சுமி, தூத்துக்குடி லட்சுமி அம்மாள் போன்ற எண்ணற்ற வீராங்கனைகள் இந்திய சுதந்திரத்திற்காக சிறையில் வாடி குடும்பங்களை மறந்து இழந்து தியாகம் புரிந்த வீரப்பெண்களை போற்றுவோம் வரலாற்று மறக்கப்பட்டாலும் நமது இதயங்களில் என்றும் அவர்கள் தியாகங்கள் மறக்க முடியாத அளவுக்கு எண்ண வீர அலைகளை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

**வாழ்க வீர மங்கையர் புகழ்**

## அழகும் பெண்களும்

இன்றைய அவசர உலகில் பெண்களுக்கென்று தனி விருப்பு வெறுப்பு கிடையாது. இயந்திரமான உலகில் வீடு, கணவன், குழந்தை, அலுவலகம் என ஓடிக் கொண்டே இருப்பதால் தன்னையும், தன் உடலையும் கவனிப்பதும் கிடையாது. பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வது மற்றவர் நம்மை ரசிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. முதலில் பெண்கள் தன்னை தானே ரசிக்க கற்றுக் கொள்ளுங்கள். நமக்கு நாம் தான் உலக அழகி நம்மை யாரும் அழகி என்று கூற வேண்டியதில்லை. அழகு என்பது பேசும் வார்த்தை, அடுத்தவருக்கு கொடுக்கும் மரியாதை மற்றும் சிரித்த முகம் இதுவே போதுமான பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சியாகவும், நம்பிக்கையாகவும், தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையும் பிறக்கிறது. இனி வரும் காலங்களில் வாரத்தில் ஒன்று (அ) இரண்டு முறை நமக்கு என நேரம் ஒதுக்கி நம்மை நாமே அழகுபடுத்திக் கொள்ளலாமா? முகத்நதில் தலையில் முடி அழகு இருந்தால் முகமே பிரகாசமாக இருக்கும். முடிக்கு ஒரு சின்ன அழகு குறிப்பு பற்றி பார்ப்போம். (ஹேர்பேக்)

**ஹேர்பேக் தயாரிக்க தேவையான பொருட்கள்:**

| | | |
|---|---|---|
| உளுந்து | - | 1 கைப்பிடி (முதல் நாள் இரவே ஊற வைக்க வேண்டும்) |
| செம்பருத்தி பூ (சிவப்பு) (ஒற்றை இதழ்) | - | 10 பூ இயற்கையான பூ கிடைக்கவில்லை என்றால் நாட்டுமருந்து கடையில் உலர்ந்த பூ வாங்கிக் கொள்ளவும். |
| ஆளிவிதை Seeds) | - | 4 ஸ்பூன் (1 டம்ளர் தண்ணீரில் 5லிருந்து 10 நிமிடம் (Black கொதிக்கவிட்டு ஜெல் மாதிரி ஆனவுடன் சூடாக இருக்கும்போதே வடிகட்டவும்) |
| முட்டை | - | 2 (வெள்ளைக்கரு மட்டும்) |

ஆலிவ் ஆயில், விளக்கெண்ணெய், - 2 ஸ்பூன்
பாதாம் ஆயில் (ஏதேனும் ஒன்று)

**ஹேர்பேக் செய்முறை:**

முதலில் மிக்ஸி ஜாரில் 1 கைப்பிடி உளுந்து, செம்பருத்தி பூ ஆகியவற்றை போட்டு ஒரு சுற்று, சுற்றி பிறகு அரைப்பதற்கு ஆளிவிதையில் எடுத்து வைத்து உள்ள ஜெல்லை போட்டு, தண்ணீர் வேண்டுமானால் சிறிது ஊற்றி நல்ல மசிய அரைத்துக் கொள்ளவும். பின்னர் மேற்கூறிய ஆயில் ஏதாவது 2 ஸ்பூன் மற்றும் முட்டையின் வெள்ளைக்கரு ஆகியவற்றை ஏற்கனவே அரைத்து வைத்துள்ளவற்றில் போட்டு மீண்டும் ஒருமுறை அரைக்கவும். (தோசை மாவு பதத்திற்கு அரைக்கவும் நைசாக இப்பொழுது ஹேர் பேக் தயார்.)

**உபயோகப்படுத்தும் முறை**

ஹேர் பேக் போடுவதற்கு முன் தினமே தலையில் நிறைய எண்ணெய் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஹேர் பேக் போடும் முன் தலையில் சிக்கெடுத்து ஹேர் பேக்கை வேரில் இருந்து நுனி முடி வரை நன்கு தடவி 20 நிமிடம் ஊறவிட்டு நீங்கள் வழக்கமாக பயன்படுத்தும் ஷாம்பு போட்டு குளித்துவிட்டு முடி காய்ந்த பின்னர் பாருங்கள் உங்களால் நம்ப முடியாது இது நம்ம முடியா என்று முடி அடர்த்தியாகவும், Shiningகாகவும், பளபளப்பாகவும், கருப்பாகவும் இருப்பதை உணர்வீர்கள் பயன்படுத்தி பயன் பெறுங்கள் தோழிகளே.

**ஈ. மோகனப்பிரியா**
தொழில்நுட்ப உதவியாளர்
33/11KV குமரன்சாலை,
துணை மின்நிலையம், திருப்பூர்

## புதிய சமுதாயம் படைக்கலாம் வா பெண்ணே!

பெண் என்பது இனமன்று அதுவொரு குணம்.
மானுடம் தோன்றுவதும் பெண்ணாலே - அது
முழு மனிதனாய் மாறுவதும் பெண்ணாலே
கோழை வீரனாவதும் பெண்ணாலே - கடும்
ஏழை செல்வந்தனாவதும் பெண்ணாலே
நற்சமுதாயம் ஆவதும் பெண்ணாலே -
துர்சமுதாயம் அழிவதும் பெண்ணாலே - எனவே
பெண் என்பது இனமன்று அதுவொரு குணமே!
பெண்ணே!
நீரின்றி அமையாது உலகென்பது பழமொழி
நீ இன்றி எதுவும் இயங்காதென்பதே புதுமொழி
பழையன கழித்து புதியன படைக்க வந்தவள் நீ
மழைனெ கருணையை மானுடம் தழைக்க அளிக்க வந்தவளும் நீ

பொறுமையில் உன்னுடன் பூமியை ஒப்பிட பிறந்தவள் நீ
மனுக்குலம் செழித்திட நல்மொழி செப்பிட பிறந்தவளும் நீ
உதிரத்தை உயிராக்கி உலகுக்கு தந்தவள் நீ
அந்த உயிருக்கு உணவாக உதிரத்தையே தந்தவளும் நீ
ஆனாலும் பெண்ணே!
உன் தியாகங்கள் இங்கே போற்றப்படவில்லை
உன் பொறுமைகள் இங்கே மதிக்கப்படவில்லை
உன் அழகு மட்டுமே இங்கே ஆராதிக்கப்படுகிறது - அதுவும்
சுகபோக பொருளாகத்தானே இங்கே சுகிக்கப்படுகிறது
மாற வேண்டியது இச்சமுதாயம் - அதை
மாற்றிக் காட்ட வேண்டியது உன் கட்டாயம்

பொறுத்தது போதும் பெண்ணே!
உணர்ந்தெழு! கிளர்ந்தெழு! சினந்தெழு!
பொறுமைக்கோர் எல்லை வைத்து நீ பொங்கியெழு!
சிறுமைபட்டு கிடந்த காலம் மாறட்டும் - புது
சிந்தனைகள் உன் எண்ணங்களில் தோன்றட்டும் -
மடமை தந்த சாத்திரங்கள் மாறட்டும் - அதை
கொளுத்திடும் அக்கினியாய உன் செயல் சீறட்டும்
உன் சீற்றத்தின் காரணம் எதுவென்பதை இவ்வுலகம் அறியட்டும்.

வீண் பெருமைகள் பேசி உனை சிறுமையாக்கிய கூட்டம்
உன் சிலிர்த்தெழும் வேகம் கண்டு எடுக்க வேண்டுமே ஓட்டம்
உன் முன்னேற்றமே இனி உன் நாட்டம் - அதை
நின்று, கண்டு, மிரண்டு ஓடும் பார் உனை அடிமைப்படுத்திய கூட்டம்.
தொழிற்சங்க புரட்சியே! நாட்டின் வளர்ச்சி!
இதை உணர்த்திட எம்ப்ளாயீஸ் பெடரேசனின் முயற்சி
அதற்காகத்தானே பொறுப்புகளின் வழியே உனக்களிக்கிறது பயிற்சி
முயற்சியும் பயிற்சியும் இணைந்தால் அதுதானே சமுதாய வளர்ச்சி
வா பெண்ணே!
அடம் பிடித்து சாதிக்கும் மடமைகளைக் கொளுத்துவோம்!
புதிய சமுதாயம் படைத்திடும் ஒளி தீபத்தை ஏற்றுவோம்!
மகளிர் தின நன்னாளை மகிழ்வுடனே போற்றுவோம்!
மறுமலர்ச்சி கண்டோமென எங்கும் பறைசாற்றுவோம்!

**N.D.S. அலெக்ஸ்,** தூத்துக்குடி
மாநில செயலாளர் / TNEBEF

# பெண்

**- சிவநாச்சியார்**

**ம**ங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்ற கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களின் வாக்கியத்திற்கிணங்க பெண்ணாய் பிறப்பதற்கு மாதவம் (புண்ணியம்) செய்திருக்க வேண்டும். கடவுளிடம் வேண்டினால் தான் ஆண் குழந்தை பிறக்கும். அந்த கடவுளே வேண்டுமென்றால் தான் பெண் குழந்தை பிறக்கும். ஆண் குழந்தை என்றால் வரவு, பெண் குழந்தை என்றால் செலவு என்று அக்காலத்தில் பெரியவர்கள் சொல்வதுண்டு. ஒரு வீட்டில் முதல் குழந்தை பெண் குழந்தையாக பிறந்தால் அதிர்ஷ்ட தேவதை பிறந்துள்ளதாக பெரியவர்கள் கூறுவார்கள். உண்மை தானே ஒரு தலைமுறையை சந்ததியை வழிவழியாக தோற்றுவிப்பவள் பெண். இவ்வுலகில் பெண்மையின் பெருமையை உணராதவர்கள் யாரும் இல்லை என்றே சொல்லலாம்.

உலக ஜனத்தொகையில் பாதிப்பேர் பெண்கள். மீதி பேர் ஆண்கள் அந்த மீதி உள்ள ஆண்களையும் பெற்றெடுத்தவர்கள் பெண்களே. இந்த பேருலகில் வாழுகின்ற மக்களெல்லாம் பெண்ணினத்தின் அன்பளிப்பு எனில் வேறு என்ன பெருமை இதைவிட எடுத்துச் சொல்வதற்கு பிரபஞ்சத்தை உருவாக்கிய இறைவன் உயிரினத்தை தோற்றுவிக்கும் சிறப்பை பெண்ணிடம் மட்டுமே கொடுத்துள்ளான். உயிரை இறைவன் கொடுத்தாலும், உடலை கருவாக்கி உருவாக்குவது (தாய்) பெண் மட்டுமே. பெண் இல்லாமல் ஆண் இல்லை.

பேச்சுக்கிடமேதடி நீ பெண் குலத்தின் வெற்றியடி ஆச்சரிய மாயையடி என்றன் ஆசை குமரியடி- நீச்சு நிலை கடந்த - வெள்ள நீருக் குள்ளே வீழ்ந்தவர் போல் தீச்சுடரை வென்ற வொளி என்று பெண் குலத்தின் வெற்றிக்காக பாடுபட்ட பாரதியின் கவிதை வரிகள் இங்கு நமக்கு பெண்குலத்தின் பெருமையை நமக்கு உணர்த்துகிறது. பெண் வயிற்றிலுருவாகி பெண் பாலுண்டே வளர்ந்தாய்! பெண் துணையால் வாழ்கின்றாய்! பெண்ணின் பெருமை உணர்! என்கிறார் வேதாத்திரி மகரிஷி அவர்கள். அத்தி மலரும் அருங்காக்கை வெண்ணிறமும் கத்துப்புனல் மீன்பதம் கண்டாலும்- பித்தரே கானார் தெரியல் கடவுளரும் காண்பரோ மானார் விழியார் மனம் - என்கிறது கம்ப இராமாயண கவிதை வரிகள். அதாவது அபூர்வமாக பூக்கும் அத்திப்பூவையும், காக்கையிடம் அருமையாகிய வெண்மை நிறத்தையும், ஒலிக்கின்ற கடலிலே மீன்களின் அடிச்சுவட்டையும் பார்த்தாலும் பார்த்துவிடலாம்.

ஆனால் மான் போலும் பார்வையையுடைய பெண்களின் மனதை வாசனை பொருந்திய மாலையை உடைய தேவர்களாலும் காண முடியுமா என்றால் முடியாது. பெண்களின் மனதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. பெண் புத்தி பின் புத்தி என்பதன் பொருள் விளக்கம் பெண்கள் பின்னால் நிகழக் கூடியதை முன்னரே உணரக்கூடிய உள்ளுணர்வு பொருந்தியவர்கள். எந்த ஒரு மனிதனும் வாழ்வில் பெண்மையின் துணை இல்லாமல் வாழ்வதில்லை. ஒரு

ஆண்மகனின் வாழ்வில் பெண் முதலில் தாயாக வருகிறாள், பிறகு சகோதரியாக, தாரமாக, மகளாக செய்யும் பணிகளில் (தொழில்களில்) பங்கு கொள்பவளாக இவ்வாறு பெண்ணின் துணை இல்லாமல் யாரும் இல்லை. ஒரு ஆணின் வாழ்க்கையில் பெண் வாழ்க்கை துணையாக வந்த பிறகே ஆணின் வாழ்க்கை முழுமை பெறுகிறது. குடும்ப வாழ்க்கையில் இன்ப, துன்பங்களில் பங்கு கொண்டு வாழ்வை சிறப்பாக வாழ்வதற்கும், குடும்ப அமைதி பெறுவதற்கும், கணவன் மனைவி உறவு சீராக இருக்க வேண்டும். அதற்கு விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை, தியாகம் என்கின்ற மூன்று நற்பண்புகள் மிகவும் முக்கியமானவை. இப்பண்புகளை பெரிதும் கடைபிடித்து வாழும் நற்குணம் கொண்டவளாக பெண் திகழ்கிறாள். மகனின் அருமை நேசத்தில் தெரியும் மகளின் அருமை பாசத்தில் தெரியும்.

மருந்தே இல்லாமல் எப்பேர்ப்பட்ட வலியையும் குணப்படுத்துவது அன்பு மட்டுமே. அத்தகைய அன்பின் மறு உருவமாக இருப்பவள் பெண். ஆண் என்பவன் உயிர் என்றால் பெண் என்பவள் மெய். அதாவது உடலாகவே இருப்பவள் பெண். உடல் உறுதி கொண்ட ஆண்மகனை விட மன உறுதி கொண்ட பெண்ணே சிறப்பானவள். பெண்கள் இல்லா உலகில் அன்பு நிலைத்திருப்பதில்லை. அன்பு இல்லா உலகில் மனிதன் வாழ்ந்திருப்பதில்லை. பெண்ணை பலவீனமானவர்கள் என பலரும் கருதுகிறார்கள். ஆனால் பெண்ணைப் போல வலிமையானவர்கள் யாரும் இல்லை. ஆண் ஆதிக்கத்தின் தடைகளை தகர்த்து, சமூக தடைகளை தாண்டி, மிகப்பெரிய சக்தியாக திகழ்கிறாள் பெண். தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைச்சான்ற சொற்கத்துச் சோர்விலான் பெண் என்கிறார் திருவள்ளுவர். பெண் என்பவள் தன்னையும் காத்துக் கொண்டு தனைக் கொண்ட கணவனையும் போற்றி தகுதியான அறங்களைப் போற்றி சோர்வடையாது இருப்பவளே பெண்.

பூ வாசல் திறந்து கொண்டு பூவுலகை பார்ப்பதற்குள்!! கள்ளிப்பாலை ஏந்திக்கொண்டு கிழவியவள் காத்திருப்பாள்!! கள்ளிப்பாலில் தப்பித்து தாய்ப்பாலை அருந்துகையில் முதல் போராட்டத்தில் வெற்றி வாகை சூடிடுவாள் பெண்! எந்த இடத்திற்கு சென்றாலும் பெண் என்பவள் இடத்திற்கு தகுந்தவாறு தன் குணத்தையும், தன்னையும் மாற்றிக் கொள்பவள் அதனால் தான் பெண்ணை ஆண்மகனுக்கு திருமணம் செய்து வைக்கிறார்கள். ஆணுக்கு பெண் நிகரல்ல, சமமும் அல்ல. பெண் என்பவள் சிறப்பு வாய்ந்தவள். பெண்கள் எதிலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்பதை வலியுறுத்தவே ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 அன்று உலக மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது என்பதை உணர்ந்து பெண்ணியத்தை போற்றுவோம். பெண்களின் கண்ணியம் காப்போம். இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்கள்.

தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கம்

பதிவு எண் : 31/2023 சென்னை

# TNEB RETIRED EMPLOYEES AND OFFICERS SANGAM

இணைப்பு : TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

| மாநிலத் தலைவர் | மாநில பொதுச் செயலாளர் | மாநில பொருளயாளர் |
| --- | --- | --- |
| **A. அருணாசலம்** | **P. சுடலை** | **K. சிவசுப்புபாண்டியன்** |
| ✆ : 98415 03371 | ✆ : 86376 87233 | ✆ : 90801 32876(w) |


வணக்கம்.

நமது அமைப்பின் துவக்கவிழா 24.02.2023 அன்று காலை 10.00 மணியளவில் திருச்சி அருண் மேக்ஸி ஹால் கூட்ட அரங்கில் TNEBEF மாநிலத் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. TNEBEF மாநில பொதுச்செயலாளர் தோழர் A. சேக்கிழார் அவர்கள் அமைப்பு துவக்கப்பட வேண்டிய சூழ்நிலைகளை விளக்கி உரையாற்றி புதிய TNEBREO சங்கத்தின் புதிய பொறுப்பாளர்களை தேர்வு செய்து அறிமுகப்படுத்தியும், அமைப்பின் சங்க கொடியை புதிய பொறுப்பாளர்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தியும், தொடர்ந்து தேர்வு செய்யப்பட்ட பொறுப்பாளர்கள் கூட்டத்தை தொடர்ந்து நடத்திட தெரிவித்தார்கள்.

புதிய மாநில தலைவராக பொறுப்பேற்ற தோழர் A. அருணாசலம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் TNEBREOS பதிவு செய்ய முழுமையாக ஏற்பாடு செய்த TNEBEF மாநில பொதுச்செயலாளருக்கும், மாநில தலைமைக்கும், தேர்வு செய்ய உறுதுணையாக இருந்த உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து இயக்க செயல்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் விளக்கி உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து TNEBREOS மாநில பொதுச்செயலாளர் தோழர் P. சுடலை நமது புதிய அமைப்பை சிறப்பாக கொண்டு செல்லவும், கிளைகள் இல்லாத வட்டங்களில் TNEBEF மாநில பொதுச்செயலாளர் வேண்டிய கோரிக்கையின் அடிப்படையில் அவர்களுடன் பயணித்து புதிய கிளை துவங்கிட வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தொடர்ந்து பொருளாளர், புதிய பொறுப்பாளர்கள் தங்களது கருத்துக்களையும், அமைப்பு எவ்வாறு அதிகப்படியான உறுப்பினர்களை சேர்ப்பது பற்றியும் விளக்கி தோழர்கள் N. முத்தையா, K. செல்வராஜ், உடுமலை சக்திவேல் B. வீரமணி, முருகானந்தம், S. இராசாங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தோழர் S.P. துரைபாண்டியன் விருதுநகர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

மாநில நிர்வாகிகள் பட்டியல்

**மாநிலத் தலைவர் :** திரு. **A. அருணாசலம்,** சென்னை

**மாநில பொதுச் செயலாளர் :** திரு. **P. சுடலை,** கோவில்பட்டி

**மாநில பொருளாளர் :** திரு. **K. சிவசுப்புபாண்டியன்,** திருநெல்வேலி

**மாநில அமைப்பு செயலாளர் :** திரு. **S. மெஞ்ஞானம்,** ஈரோடு

| | |
|---|---|
| **மாநில உப தலைவர்கள் :** | திரு. **N. முத்தையா,** திருநெல்வேலி, திரு. **R. மூக்கையா,** தேனி, திரு. **A. தனசேகர்,** மயிலாடுதுறை, திரு. **S. சுப்பையன்,** திருவாரூர், திரு. **G. முருகானந்தம்,** திருப்பூர், திரு. **T. மோகனதாஸ்,** தஞ்சாவூர், திரு. **S. தங்கத்துரை,** தென்காசி/திருநெல்வேலி, திரு. **C.K. சுப்பிரமணி,** கோவை, **P.S. ராஜு.** |
| **மாநில துணை பொதுச்செயலாளர்கள் :** | திரு. **R. சக்திவேல்,** கோவை, திரு. **K. செல்வராஜ்,** நாகப்பட்டினம், திரு. **M. கோபால்,** சென்னை, **S. பார்த்தசாரதி,** சென்னை. |
| **மாநில செயலாளர்கள் :** | திரு. **B. வீரமணி,** கோவை, திரு. **S. இராசாங்கம்,** மதுரை, திரு. **N. பக்கிரிசாமி,** திருவாரூர், திரு. **R. செல்வராஜ்,** சென்னை, திரு. **K.R. சுப்பிரமணியன்,** திண்டுக்கல், திரு. **M. சுந்தரராஜன்,** MA திருப்பூர், **T. நஞ்சுண்டராவ்.** |
| **மாநில இணைச்செயலாளர்கள் :** | திரு. **N. கிருஷ்ணமூர்த்தி,** மதுரை, திரு. **K. தயாநிதி,** சென்னை, திரு. **V. தங்கவேலு, தூத்துக்குடி,** திரு. **V. வைரப்பன்,** நாகப்பட்டினம், திரு. **M.G. பரணிகுமார்,** சென்னை, திரு. **S. ஆறுமுகம்,** கோவில்பட்டி, **G. பாலசுப்பிரமணி,** விருதுநகர், **S. சூரியகுமார்** |

## தீர்மானங்கள்

1. தேர்தல் பரப்புரையில் மாண்புமிகு/தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்திடுவோம் என்று கூறியதை அமல்படுத்திட வேண்டுகிறோம்.
2. நிரந்தரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வு வழங்கப்படுகின்ற அதே நேரத்தில் ஓய்வூதியர்களுக்கும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் வழங்கிட வேண்டும்!
3. மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் வழங்கப்படுகின்ற காப்பீட்டு அட்டையில் மனைவி பெயர்/ புகைப்படம்/ கைப்பேசி எண் தெரிவிக்கப்படாமல் சில குறைகள் உடன் வழங்கப்பட்டு வருகிறது, சரி செய்ய உரிய நடவடிக்கை எடுத்து புதிய காப்பீட்டு அடையாள அட்டை வழங்கிட வேண்டும்!
4. ஓய்வூதியர்களுக்காக குறைகளை களைவதற்கு நிர்வாகத்தோடு பேசி தீர்வுக்கான ஓய்வூதிய சங்கத்தையும் அழைத்து பேசுவது போல் தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கத்தையும் அழைத்து பேச வேண்டும்!
5. ஓய்வூதிய சங்கங்களுக்கு உத்திரவு நகல் வழங்குவதற்கும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் உள்ள சங்கப் பட்டியலில் தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர்கள் சங்கத்தையும் இணைக்க வேண்டும்!
6. மாநில தலைமை நிர்வாகிகள் 5, மாநில உபதலைவர் 10, துணை பொதுச்செயலாளர் 4, மாநில செயலாளர் 10, மாநில இணை செயலாளர் 7, எண்ணிக்கை 36 நிர்வாகிகள் கொண்ட மாநில நிர்வாகிகள் தேர்வு செய்ய இப்பொதுக்குழு அங்கீகரிக்கிறது.
7. மின்சார வாரியத் தலைவர், செயலாளர் இதர அலுவலர்கள் ஏப்ரல் மாதத்தில் நமது சங்கதின் சார்பாக சந்தித்து அறிமுகப்படுத்திக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

# தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுபெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கம்

பதிவு எண் : 31/2023 / சென்னை

இணைப்பு : TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன், பதிவு எண் : 3600/ சென்னை.

## நாகப்பட்டினம், மன்னார்குடி, மயிலாடுதுறை மற்றும் திருத்துறைப்பூண்டி கிளைகளின்

# சிறப்பு பொதுக்குழு கூட்டம்.

